**வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2020**

-----------------------------------------------------------------------------------

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138–சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01(பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வினைத்திறனான தேசிய வீதி முறைமையின் நிலைத்து நிற்கவல்ல விநியோகத்தின் ஊடாக போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. ஆரம்ப அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 69.10 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், 2008 யூன் 23 ஆந் திகதிய முதலாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 11,579 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 59.60 மில்லியன் (ஐ.அ.டொலர் 98.1 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் 15 இல் இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் மீது ரூபா 11,081 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 63.6 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மேலும், செயற்திட்டக் காலமானது 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடரப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

தேசிய வீதிகளின் 620 கி.மீ புனரமைப்பு மற்றும் பராமரித்தல் வேலைகளில், செயற்திட்டத்தின் முடிவுத் திகதியில் உள்ளவாறு 685 கி.மீகள் செயற்திட்டத்தினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 635 கி.மீ மாகாண மற்றும் கிராமிய வீதிகளில், செயற்திட்ட முடிவில் 162 கி.மீகள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், 11 வீதிகளின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் 01 வருடம் தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய 05 வீதிகளின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் 200 நாட்களிற்கு மேலான தாமத மடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கடன் உடன்படிக்கையானது 2006 சனவரி 16 இல் கைச்சாத்திடப்பட்டு ஆரம்பத்தில் 2011 மார்ச் 31 இல் பூர்த்தி செய்ய பட்டியலிடப்பட்டிருந்தும், அதன்படி, அது 2016 திசெம்பர் 31 வரை 10 வருடங்கள் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீடித்ததிலிருந்து நான்கு வருடங்கள் கடந்திருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு செயற்திட்டத்தினால் மூடும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய அமுல்படுத்தல் முகவரிற்கு செயற்திட்டத்தின் சொத்துக்களை கையளிப்பதற்கும் முடிவுறுத்தல் நோக்கத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவும் நிறைவேற்றுமுகவரினால் எவ்வித விசேடமான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக மூடும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க ஆரம்ப கட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 புரநடையான நடவடிக்கைகள்/செயற்திட்ட குறிக்கோலிற்கு மேலாக செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இங்கிரிய தொடக்கம் ரத்னபுர வரையான வீதியின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலிற்கான ஒப்பந்தம் 2006 மார்ச் 21 இல் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் 2007 மே 31 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் 2009 நவம்பர் 27 வரை தாமதமடைந்திருந்தது. இது செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக அடையாளப்படுத்தப்படாமையினாலும் காணி சுவீகரிப்பில் தாமதத்தினாலும் ஆகும். அத்தாமதத்தின் பெறுபேறாக, ஒப்பந்ததாரர் வட்(VAT) உள்ளடங்களாக ரூபா 1,150 மில்லியன் செலுத்தியிருந்ததுடன் தாமத வட்டி 2019 ஒக்டோபர் 16 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியுடன் ஒப்பந்ததாரரினால் செய்யப்பட்ட ரூபா 734 மில்லியன் மீளப்பெறலை மிஞ்சியிருந்தது. | பிரதான பிணக்கு தாமத காலப்பகுதியின் போது ஒப்பந்ததாரர்கள் அவர்களது மேந்தலைகளை மீளப்பெற உரித்துடையவராக இருந்தனர். | காரணங்கள் மற்றும் மேலதிக கிரயத்திற்கு பொறுப்பான தரப்பினர்களை மீளாய்வு செய்வதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான மேலதிக கிரயங்களை தவிர்க்க தந்திரோபாயத்தினையும் வகுக்குக. |
| (ஆ) | காலி தெனியாய வீதியின் 68 கி.மீ புனரமைப்பு வேலை 2006 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கையேற்பு பத்திரமானது 2010 சனவரி 05 இல் வழங்கப்பட்டிருந்தும், ஒப்பந்ததாரர்களின் உரிமையினை தீர்ப்பதன் மீதான பிணக்கு 10 வருடங்களிற்கு மேலாக தாமதமாக காணப்பட்டது. நடுவர் தீர்ப்பு செயன்முறை மூலம் உரிய அதிகாரிகளினால் தீர்மானத்தினை எடுப்பதில் தாமதத்தின் பெறுபேறாக, ஒப்பந்ததாரர் அவரினால் பெறப்பட்ட ரூபா 181 மில்லியனிற்கு மேலாக ரூபா 330 மில்லியனினை செலுத்தியிருந்தார். | 2021.07.05 இல் நடாத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தில், அமைச்சரவை ரூபா 1,918,215,256.00 இற்கு மேலதிகமாக வேலைகளிற்காக மொத்தமாக ரூபா 67,686,388.69 மற்றும் ஐ.அ.டொலர் 858,017.28 இனை சீனா வெளிநாட்டு பொறியியளாளர் கம்பனிக்கு ஒப்பந்தத்தினை அனுமதித்திருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் வட்டிக்கிரயங்களை குறைக்க பிணக்குகளை ஆரம்பத்திலேயே தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |